படமாக எடுக்கப்பட்டபோது 48-வது செய்தி மலரில், காவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில் மத்திய அரசு காலம் கடத்துவது குறித்து ஆராய சென்னை கோட்டையில் சர்வ கட்சிக் கூட்டம் நடைபெற்றதாகச் செய்தி வந்தது. அதிலே "மத்திய அரசு காலம் கடத்துவது குறித்து ஆராய" என்ற சொற்றொடரை சென்லார் அனுமதிக்கவில்லை; அதை வெட்டிவிட்டார்கள்.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, பொதுவாக சமுதாயத்தையும், மற்ற வற்றையும் பாதிக்கக்கூடிய வகையில் இருந்தால் சென்சார் "கட்" செய்வார்கள். ஆனால் நம்முடைய அரசாங்கம் உண்மைகளை எடுத்துச் சொல்கிற நேரத்தில், இப்படி உண்மையான செய்திகளைக் கூட கட் செய்து இருக்கிறார்களே, அதை மீண்டும் சேர்ப்பதற்கு அந்த சென்சார் போர்டினிடத்தில் வலியுறுத்தப்பட்டதா, அந்த போர்டு என்ன பதில் சொல்லிற்று என்ற விவரம் அறியலாமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** சென்சார் போர்டிலே அதுபற்றி பேசப்பட்டது. மத்திய அரசின் தொடர்புடைய அலுவலர்களிடமும் அது பற்றித் தெளிவாகக் கூறப்பட்டது. ஆனாலும் அவர்கள் பிடிவாதம் காட்டினர். ஆனால் அந்தப் படம் வெளிவரவேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்ட காரணத்தாலும், இந்தப் பிரச்னைக்கு முடிவு காணக் காலதாமதம் ஏற்படும் என்று கருதிய காரணத்தாலும், அந்தக் கூட்டத்தின் நிகழ்ச்சிகளை மக்கள் அறிவது இந்த ஒரு வரி சேர்ப்பதன் காரணமாகத் தடைபடக்கூடும் என்ற காரணத்தாலும், அந்த ஒரு வரியைச் சேர்க்காமலேயே அந்தப்படம் வெளியிடப் பட்டது.

### ஆப்காரி சட்டம்

*249 வினா—**திரு. மே. சி. தூயமணி:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆப்காரி சட்டத்தை அமல் நடத்துவது சம்பந்தமாக எத்தனை டிப்டி-கலெக்டர் பதவிகள் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாவட்டத் துணை ஆட்சியர் தரத்தில் பதினான்கு ஆயுத் தீர்வை உதவி ஆணையாளர் Deputy Collectors பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**திரு. மே. சி. தூயமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆப்காரி சட்டம் எந்த ஆண்டில் இயற்றப்பட்டது? அந்தச் சட்டத்தை மாற்றி யமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இது ஒரு பரீட்சை கேள்வி போல் இருக்கிறது. தனிக்கேள்வி போட்டால் பதில் தரலாம்.

### உதகை கலைக்கல்லூரி மாணவர்களுக்கு விடுதி

*250 வினா—**திரு. கு. அ. பொம்மன்:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகை கலைக்கல்லூரி மாணவர்களுக்கு விடுதி கட்டடம் கட்டுவது குறித்து செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) உதகை அரசினர் கல்க்கல்லூரிக்கு ரூ. 7.70 லட்சம் செலவில் பல்கலைக்கழக மான்யக் குழுவின் உதவியுடன் விடுதிக் கட்டிடம் கட்ட அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. கட்டிட வேலை விரைவில் துவங்கப்படும்.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, அந்த விடுதியில் கோடைக் காலத்தில் உல்லாசப்பயணிகள் தங்க அனுமதிக்கப்படுவார்கள் என்று தெரிகிறது. அப்படித் தங்குவதற்கு அனுமதிக்கப்படுவதாக இருந்தால், நடுத்தர மக்கள் தங்கக்கூடிய அளவில் குறைந்த கட்டணம் வைத்து அனுமதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** உதகையில் உள்ள கலைக்கல்லூரி மாணவர்களுக்காகக் கட்டப்படும் விடுதியில் கோடைக்காலத்தில் சுற்றுலாவினர் தங்குவதற்கு ஏற்ற வகையில் வைப்பது நல்லது என்று மாவட்ட ஆட்சியாளர் கூறியுள்ளார். கல்லூரி கல்வி இயக்குநருக்கு அக்குறிப்பை அனுப்பிவைத்தார்கள். மாணவர்களின் வசதிக்காகக் கட்டப்படுகிற விடுதி வேறாக இருக்கும், சுற்றுலாவினர் தங்குவதற்காகக் கட்டப்படுகிற விடுதி வேறாக இருக்கும் என்றும், அது சுற்றுலாவினர் தங்குவதற்கு அவ்வளவு சரியாகப் பொருந்திவராது என்ற கருத்தைக் கல்லூரி கல்வி இயக்குநர் அறிவித்து இருக்கிறார்கள். அந்த இரண்டு கருத்துக்களும் ஒன்றுக்கொன்று முரணாக இருக்கின்றன. அதை அரசாங்கம் பரிசிலித்துக்கொண்டிருக்கிறது. பரிசிலனை முடிந்தவுடன் முடிவு எடுக்கப்படும். 7.70 லட்சம் ரூபாய் செலவில் விடுதி கட்டுவது என்பது உறுதி. அதற்கு அனுமதி வழங்கப்பட்டுவிட்டது. யூ.ஜி. கமிஷனிடமிருந்து ரூ. 3 லட்சம் உதவி கேட்கப்பட்டிருக்கிறது. கூடிய விரைவில் வேலைகள் துவங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும். மாணவர்களுக்கு மட்டும் பயன்படுமா அல்லது இரண்டுபேருக்குமே பயன்படுகிற வகையில் அமையுமா என்பது பிறகுதான் முடிவு செய்யப்படும்.

### ஆசிரியர் ஆதாரப் பயிற்சிப் பள்ளிகள்

*251 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆரம்ப ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கு மாணவர்களைச் சேர்ப்பதை சிறிது காலம் நிறுத்தி வைக்கும் உத்தேசம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, ஆரம்பப் பள்ளி ஆசிரியர் பயிற்சிக்கு மாணவர்களைச் சேர்ப்பது இதற்கு முன்பு எப்போதாவது நிறுத்தி வைக்கப்பட்டதா அல்லது இனிமேலாவது அதைப் பரிசிலனைக்கு அரசு எடுத்துக்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, ஆரம்பப் பள்ளி ஆசிரியர் பயிற்சிக்கு மாணவர்களை எடுத்துக்கொள்வது அறவே நிறுத்தி வைக்கப்படவில்லை என்று சொன்னேன். தேவைப்படுகிற அளவில் வைத்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தின் அடிப்படையில் ஓரளவுக்கு மாணவர்கள் சேர்ப்பதைக் குறைத்துக் கொண்டு வருகிறோம். ஏனென்றால் ஏற்கெனவே பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஏராளமாக இருப்பதால், அவர்களுக்கு வேலை